# தமிழக அரசியலில் செல்வி ஜெ.ஜெயலலிதாவின் தனிப்பட்ட ஆளுமை - ஒரு அரசியல் விமர்சன நோக்கு

**க.அருந்தவராஜா[1] ஶ்ரீமங்களருபி சிவகுமார்[2]**
[1,2]வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*arunn.msu@gmail.com, mangalarubysivakumar@yahoo.com*

**ஆய்வுச்சுருக்கம்:** தமிழகத்தினைச் சேர்ந்த அரசியல்வாதிகளுள் தனக்கென ஒரு இடத்தினைப் பெற்று உலகளாவிய ரீதியில் செல்வாக்குப் பெற்ற ஒருவராக விளங்குபவர் செல்வி ஜெயராம் ஜெயலலிதா அவர்கள். எவ்விதமான அரசியல் பின்னணியுமற்று பிறந்து வளர்ந்த இவர், சினிமாத்துறைக்குள் நுழைந்து,எம்.ஜி.இராமச்சந்திரனது உதவியுடன் அரசியலில் இணைந்து, அவரது மரணத்தின் பின்னராகப் பலத்த சவால்களின் மத்தியில் தமிழகத்தின் முதலமைச்சரானவர். 1991இல் முதலாவது தடவையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட இவர் தொடர்ந்துபல்வேறு வகையான நலத்திட்டங்களை அறிவித்து அதன்படி செயற்பட்ட செல்வி ஜெ.ஜெயலலிதாவினுடைய தனிப்பட்ட அரசியல் ஆளுமையானது பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. இந்தியாவின் பிற மாநிலங்களில் பெண் முதலமைச்சர்களின் ஆட்சிமுறை அவ்வப்போது இருந்தபோதும்கூட அவர்களையெல்லாம் விஞ்சும் வகையில் அவரது செயற்பாடுகள் காணப்பட்டதன் பின்னணியில்தமிழகத்தில் தற்போதும் மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள முதலமைச்சராக அவர் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனது இவ்வாய்வானது ஜெயலலிதாவின் தனிப்பட்ட அரசியல் ஆளுமையின் இயல்பினையும், அரசியலில் அவர் தற்காலம்வரை எதிர்கொண்டிருக்கின்ற சவால்களையும், அவற்றில் அடைந்த வெற்றிகள் மற்றும் தோல்விகள், எதிர்காலத்தில் அவரால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் போன்றவற்றினையெல்லாம் வெளிப்படுத்துவதனைப் பிரதான நோக்கங்களாகக் கொண்டுள்ளது. அரசியல் விமர்சன நோக்கில் அமைந்துள்ள இவ்வாய்வானது முதற்தர மற்றும் இரண்டாந்தரத் தரவுகளை ஆய்விற்கான ஆதாரங்களாகப் பயன்படுத்தியுள்ளது.அவ்வகையில் இவ்வாய்வானது பெருமளவிற்கு அரசியல் சார்ந்து விமர்சன நோக்கில் நிற்பதுடன் பரந்துபட்டதாகவும் உள்ளது. பண்புசார் தகவல்களை பெருமளவிற்கு அடிப்படையாகவும் இவ்வாய்வானது கொண்டமைந்துள்ளது. நேரடி அவதானிப்புக்கள், நேர்காணல்கள், வினாக்கொத்துக்கள் போன்றன முதற்தர ஆதாரங்களாகவும் அரசியல் அறிக்கைகள், ஆவணங்கள், நூல்கள், பத்திரிகைகள், கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் என்பன ஆய்வில் இரண்டாந்தர ஆதாரங்கள் வரிசையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுப்படப் பார்க்கும்போது இந்தியாவிலேயே பல்வேறு மாநிலங்களில் ஆட்சியலமர்ந்த இந்திய பெண் முதலமைச்சர்களில் அதிகளவான செல்வாக்கினைப் பல்வேறு வழிகளில் பெற்ற ஒருவராக விளங்குகின்ற இவர் பல்வேறு ஊழல் வழக்குகளிலும் அவ்வப்போது சிக்கித் தவிக்கின்றமை இவரது ஆட்சியினைப் பற்றி விமர்சிப்பவர்களுக்கும், எதிர்கட்சியினருக்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது. தனது பதவிக்காலம் ஒவ்வொன்றிலும் ஏதோ ஒரு அரசியல் சிக்கலில் மாட்டிக்கொள்ளுகின்ற இவர் வருங்காலங்களில் இவ்விடயமாகஎச்சரிக்கையாக இருப்பதும் இவருக்கும் இவர் சார்ந்த கட்சிக்கும் பயன் அளிப்பதாக அமையும்.

**திறவுச்சொற்கள்** : தனிப்பட்ட ஆளுமை, தொட்டில் குழந்தைத் திட்டம், மலிவு விலை

## அறிமுகம்

மக்களால் நான். மக்களுக்காகவே நான்“ இது 2016இல்நடைபெற உள்ள தமிழகச் சட்டசபைத் தேர்தலுக்கான ஜெயலலிதாவினுடைய விளம்பர மகுட வாசகங்களிலொன்று. இதுவே நான் என்ற அவரது தனிப்பட்ட ஆளுமையின் வெளிப்பாட்டினைக் காட்டுகின்றது.திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து (தி.மு.க) கணக்கு கேட்டதன் பின்னணியில் கழட்டிவிடப்பட்ட எம்.ஜி.இராமச்சந்திரனது (எம்.ஜி.ஆர்) முயற்சியினால் ஆரம்பித்து வளர்த்தெடுக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினை (அ.இ.அ.தி.மு.க) அவருக்குப் பின்னர் அழியவிடாது பல்வேறு சவால்களின் மத்தியில் அதற்குத் தலைமை தாங்கி தற்போது வரை அதனைக் கட்டிக்காத்து வருபவர் செல்வி ஜெயலலிதா என்பது குறிப்பிடத்தக்கது. எம்.ஜி.இராமச்சந்திரனுக்குப் பின்னர் அவரது எதிரிகள் கட்சியினது அழிவினை எதிர்பார்த்து ஆர்ப்பரித்து நின்றவேளை அதற்குத் தன்னுடைய தனிப்பட்ட ஆளுமையின் மூலமாக முடிவு கட்டியவர் இவர். ஏற்கனவே மூன்று தடவைகள் தமிழ் நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த இவர் அக்காலப்பகுதியில் மக்களது நலன்களைக் கருத்தில்கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து அவற்றினைச் செயற்படுத்தி வந்தவர். தற்போது நான்காவது தடவையாகவும் அவற்றினைத் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றார். ஒவ்வொரு தடவையும் முதலமைச்சராகும்போதும் அரசியலில் பல நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்து வருபவர். தமிழக வரலாற்றில் தேர்தலின் மூலமாகத் தெரிவான முதலாவது பெண் முதலமைச்சரான இவர்

முதலமைச்சராக இருந்த சந்தர்ப்பதிலேயே அளவிற்கு அதிகமான சொத்துக்களைக் குவித்த வழக்கில் சிறை சென்றவர் என்ற பெயரினையும் பெற்றிருக்கின்றார். எது எவ்வாறாயினும் அவரது தனிப்பட்ட அரசியல் இராஜதந்திரமும், அதனுடன் இணைந்த அணுகுமுறையுமே அவரது நீண்டகால அரசியல் செல்வாக்கினது தனித்துவம் என்பது நோக்கத்தக்கது.

**ஜெயலலிதாவினுடைய ஆரம்பகாலம்**

தமிழ் நாட்டினுடைய பொதுத்தேர்தல் அண்மையில் நடைபெற்று முடிந்தஇவ்வேளையில் தற்போது முதலமைச்சர் பதவியில் அமர்ந்துள்ள செல்வி ஜெ.ஜெயலலிதா எனப்படுகின்ற கோமளவல்லி ஜெயராம் என்பவர் 1948 பெப்ரவரி 24இல் கர்நாடக மாநிலத்திலுள்ள மாண்டியா மாவட்டத்தில் பாண்டவபுரா தாலுகாவில் அமைந்துள்ள மேல்கோட்டை என்ற ஊரில் பிறந்தார். ஜெயராம்-வேதவல்லி என்பவர்களுக்கு இடையிலே இளைய மகளாகப் பிறந்தஜெயலலிதா இரண்டு வயதாக இருக்கின்றபோதே தந்தையினை இழந்தார். இவரது தந்தையார் மைசூர் மகாராஜாவினுடைய குடும்ப வைத்தியராகப் பணியாற்றியவர்.திருச்சியினை அடுத்துள்ள ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்த இரங்கசாமி ஐயங்கார் இவரது தாய் வழிப்பேரன் என்பது குறிப்பிடத்தக்கது.*(அறிவகராஜா,க.,2011)*தந்தையினை இழந்த சில காலத்தில் தாய் மற்றும் சில உறவுகளுடன் பெங்களுருக்குச் சென்றார். அங்கே இவர் பிஸப் கோட்டன் பெண்கள்உயர்நிலைப்பாடசாலையில் கல்வியினைத் தொடர்ந்தார். இந்நிலையில் இவருடைய தாயார் சந்தியா என்ற பெயருடன் தமிழ் சினிமாவிற்குள் நுழைந்தார். இதனால் தாயுடன் சென்னைக்கு வர வேண்டியநிலை அவருக்கு ஏற்பட்டது. சென்னையில் சேர்ச்பேர்க் ப்ரேசெண்டேசன் கொன்வேன்ரில் கல்வியினைத் தொடர்ந்த இவர் ஸ்ரெல்லா மேரிஸ் கல்லூரியில் தன்னுடைய பட்டப்படிப்பினை ஆரம்பித்தார். இந்நிலையில் அவருக்கும் சினிமாவில் நடிப்பதற்கான சந்தர்ப்பம் தாயாரின் மூலமாகக் கிட்டியது. உண்மையில் சட்டம் படிக்க வேண்டும் என்ற அவரது விருப்பமானது இதன் மூலமாக நிராசையாகப்பட்டது. தாயாரது விருப்பத்தின் பிரகாரம் சினிமாவிற்குள் காலடியெடுத்து வைத்தார் ஜெயலலிதா.

**அரசியல் பிரவேசம்**

செல்வி ஜெயலலிதாவினுடைய அரசியல் பிரவேசமானது அக்காலத் தமிழக அரசியல் தலைவர்கள் எவரும் எதிர்பார்க்காத ஒன்று. முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் என்ற எம்.ஜி.ஆர் இல்லையென்றால் இன்று இவரது வாழ்வு திசை மாறி வேறெங்கோ சென்றிருக்கும். அவருடன் ஜோடியாகத் திரைப்படங்கள் பலவற்றில் இவர் நடித்தார். அச்சமயத்தில் இவரது நடவடிக்கைகள் எம்.ஜி.ஆரைக் கவர்ந்தததன் பின்னணியில் 1982இல் அவரது சிபார்சின் பிரகாரம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். அன்று தொடக்கம் இவரது அரசியல் நகர்வு வேகமாக, இராஜதந்திர அடிப்படையில் முறையான திட்டமிடலின் அடிப்படையில் நகர ஆரம்பித்தது. அவ்வாண்டு கடலூரில் நடைபெற்ற மாநாட்டில் எம்.ஜி.ஆரினால் மக்கள் முன்பாக அவர் கட்சி உறுப்பினராக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் கொள்கை பரப்புச் செயலாளராக நியமனமும் பெற்றுக்கொண்டார்.*(தினகரன்,2006செப்ரெம்பர்12)*தொடர்ந்து கட்சிக்குள்ளேயே சில மூத்த தலைவர்களது எதிர்ப்புக்களும் இவருக்கு எதிராக வளர ஆரம்பித்தது. இப்பின்னணியில்அவர் தனக்கு எதிராக முளைக்கின்ற சவால்களை எதிர்கொள்ளுவதற்கான பக்குவத்தினையும்கூடவே வளர்க்க ஆரம்பித்தார்.

ஜெயலலிதா கட்சியில் இணைந்து குறுகிய காலத்திற்கு உள்ளாகவே கட்சியின் அபரிவிதமான வளர்ச்சியும் பெண்கள் மற்றும் இலட்சக்கணக்கான தொண்டர்களது ஆதரவினையும் பெற்றுக்கொண்டார். 1984இல் இராஜசபா (சுயதலய ளயடிாய) உறுப்பினரானார். நாடாளுமன்றம் சென்ற இவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினது துணைத்தலைவராகவும் செயற்பட்டார். மேல்சபையில் உறுப்பினராக இருப்பதற்கு நல்ல ஆற்றலும் போதுமான பேச்சாற்றல் மற்றும் சரளமாகப் பேசக் கூடிய ஆங்கில அறிவு என்பன அவசியம். அறிஞர் அண்ணா அமர்ந்திருந்த இருக்கையில் அமர்ந்த இவர் அதனைத் தனது பாக்கியமாகவும் கருதினார். இப்பதவியினது இவரது திறமையான செயற்பாட்டின் பொருட்டுக் கிடைத்த பதவியே. இவரது கடின உழைப்பினைப் பராட்டிய எம்.ஜி.ஆர் இவரைத் தமிழ்நாடு சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழுவினது உறுப்பினராக நியமித்தார்.தொடர்ந்து இவரது தலைமைத்துவப் பண்பானது மக்கள் மத்தியில் படிப்படியாக வளர ஆரம்பித்தது.

இவ்வேளையில் எம்.ஜி.ஆருக்கு அடிக்கடி உடல்நலக் குறைவு ஏற்பட்டதன் பின்னணியில் சிகிச்சையின் பொருட்டு அமெரிக்கா சென்றுவர வேண்டியேற்பட்டது. 1984 அமெரிக்கா சென்ற இவர் 1985 பெப்ரவரியில் தமிழகம் திரும்பிய சமயத்தில் கட்சியினது கொள்கை பரப்புச் செயலாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்த ஜெயலலிதா மீளவும் அப்பதவிக்கு எம்.ஜி.ஆரினால் நியமனம் செய்யப்பட்டார். இந்நிலையில் 1986 செப்ரெம்பரில்

மீளவும் எம்.ஜி.ஆர் அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பினார். 1987 டிசம்பர் 24இல் திடீரென அவர் மரணமடைந்தார். தொடர்ந்து கட்சிக்குள் குழப்பங்கள் தலைவிரித்தாடின. பல சந்தர்ப்பங்களில் அதாவது எம்.ஜி.ஆருடைய மரண வீட்டிலிருந்து சட்டசபைவரை அவர் ஒரு பெண் என்றும் பார்க்காமல் அவமானப்படுத்தப்பட்டார். சட்டசபையில் பெண் ஒருவர் சந்திக்காத அவமானத்தினையும் பேச்சுக்களையும் தனது எதிர் கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர்களாலும் தனது கட்சியினைச் சேர்ந்த சில உறுப்பினர்களினாலும் எதிர்கொண்டார். இவையெல்லாம் இவருக்கு தற்துணிவினையும் ஆளுமையினையும் எதிரிகளைச் சமாளிக்கின்ற மனப்பக்குவத்தினையும் அவருக்குள்ளேயே வளரச் செய்தது.

ஏற்கனவே குறிப்பிட்டதனைப் போன்று இவர் ஒரு பெண்ணாக இருந்ததன் காரணத்தினால் அரசியலுக்கு வரும்போது பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகினார். அவர் பெண், பூர்வீகத்தினைக் கன்னடமாகக் கொண்டவர், திராவிடர் அல்லாதவர், நடிகை என்றெல்லாம் அவர் விமர்சிக்கப்பட்டார். எம்.ஜி.ஆர் உடல்நலம் குன்றி அமெரிக்காவில் சிகிச்சை பெற்றிருந்தபோது இவருக்கு அவரைப் பார்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஜெயலலிதா ஒரு கட்டத்தில் அச்சமயத்தில் இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்திக்கு எழுதியகடிதமொன்றில் எம்.ஜி.ஆர் தனது செல்வாக்கு அதிகரித்து வருவதனைக்கண்டு பொறாமை அடைகின்றார் என்றும் அவரால் தொடர்ந்து முதல்வராகப் பணியாற்ற முடியாதெனவும் தன்னை முதல்வராக்கும்படி கோரியும் குறிப்பிட்டதாக மக்கள் குரல் என்ற பத்திரிகையில் செய்தியொன்று பிரசுரிக்கப்பட்டது. ஆனால் இச்செய்தியினை பொய்யான செய்தியென ஜெயலலிதாவினுடைய தரப்பு முற்றாக மறுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இச்செய்தியினை எம்.ஜி.ஆர் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் அவருக்கும் தெரியப்படுத்தப்பட்டது. ஆத்திரமடைந்த அவர் ஜெயலலிதாவுடன் எவரும் தொடர்புகள் வைத்திருக்கக் கூடாதெனவும் தெரிவித்தார். இருப்பினும் அவரை கட்சியிலிருந்து உடனடியாக நீக்காமல் அதனைத் தள்ளிப்போட்டார் என்பதும் ஒரு செய்தி. *(வீரகேசரி, 2016மார்ச்சு 27)*

இது இவ்வாறு இருக்க எம்.ஜி.ஆர் அவர்களது மரணத்தின் பின்னதாகப் பதவிக்காகச் சண்டைகள் ஏற்பட்டன. தொடர்ந்து அடுத்த முதல்வர் யார் என்பது தொடர்பாகக் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு கட்சி இரண்டாகப் பிளவுபட்டது.இந்நிலையில் ஜெயலலிதாவின்மீது அதிருப்தி கொண்டவர்களுக்கு அவரைப் பழிவாங்குவதற்கான சந்தர்ப்பம் கிட்டியது. பின்னர் எம்.ஜி.ஆர் அவர்களது மனைவி ஜானகி அவர்கள் முதல்வரானார். 24 நாட்களின் பின்னராக அவரது அமைச்சரவை 1988 ஜனவரி 28இல் கலைக்கப்பட்டது. 1989 ஜனவரி 21இல் சட்டசபைக்கான தேர்தல் நடைபெற்றது. அதில் தி.மு.கவிற்கு வெற்றி கிட்டியது. பிளவுபட்ட ஜெயலலிதா அணியினருக்கு 27 இடங்கள் கிடைத்தன.*(தினக்குரல், 2016 மார்ச்சு 20)* ஜானகி அணியினருக்கு ஒரு இடமும் கிடைக்கவில்லை. இருவரும் தனித்தனியாகப் போட்டியிட்டுத் தோற்றனர். தேர்தலின் பின்னராக பலர் ஜெயலலிதாவினது அணிக்குத் திரும்பினர். இரட்டை இலைச்சின்னமும் தலைமை நிலையக் கட்டிடமும் அவருக்குக் கிடைத்தன. ஜெயலலிதா சட்டசபையின் எதிர்கட்சித் தலைவரானார். ஜானகி அரசியலிலிருதே ஒதுங்கினார்.

இந்நிலையில் சட்டசபையினது வரவு செலவுத்திட்டத் தொடர் 1989 மார்ச்சு 25இல் ஆரம்பித்தபோது சட்டசபையில் தி.மு.க மற்றும் அ.அ.தி.மு.க கட்சியின் உறுப்பினர்களிடையிலே ஏற்பட்ட பிரச்சினையில் அவமானப்படுத்தப்பட்ட அவர்“நான் சட்டசபைக்கு வருவதானால் ஆளுங்கட்சி உறுப்பினராகவே வருவேன்“ என்று கூறிவிட்டுச் சட்டசபையிலிருந்து வெளியேறினார். (*றறற.டிடிஉ.உழஅ.்.நெறள.்.ழசடன-யளயை-ளைெயை-32857257*) இந்நிலையில் 1990இல் தி.மு.க அரசினால்இந்தியப் பிரதமராக அச்சமயத்தில் காணப்பட்ட சந்திரசேகரது அரசினால் தமிழகத்தின் சட்டம், ஒழுங்கு பிரச்சினை காரணம் காட்டப்பட்டுக் கலைக்கப்பட்டது. தொடர்ந்து மத்திய அரசும் கலைந்தது. இதனால் 1991இல் பாராளுமன்றத்திற்கும் சட்டசபைக்கும் தேர்தல்கள் நடைபெற்றன. இத்தேர்தலில் அ.அ.தி.மு.க பெரும் வெற்றி பெற்றது. தொடர்ந்து காங்கிரசுடன் கூட்டணி அமைக்கப்பட்டது. ஜெயலலிதா 1991 ஜூன் 24இல் தமிழகத்தினது முதல்வரானார். இதன்பின்னராக 2001, 2011 ஆகிய காலங்களிலும் முதலமைச்சர் பதவியினைத்தொடர்ந்து வகித்தார்.

**ஜெயலலிதாவினுடைய அரசியல் பயணம்**

அரசியலுக்குள் நுழைந்த சமயத்தில் “அம்மு“ என அழைக்கப்பட்டு வந்த ஜெயலலிதா 1991இல் முதல்வரான பின்னர் கட்சி உறுப்பினர்களால் “அம்மா“ என்றே அழைக்கப்பட்டு வருகின்றார். எம்.ஜிஆர் அவர்கள் அக்காலப்பகுதியில் புரட்சித்தலைவர் என்ற பெயரினால அழைக்கப்பட்டார். இவர் அவரது அரசியல் வாரிசாகக் கருதப்பட்டதன் பின்னணியில் புரட்சித்தலைவி எனவும் ஆதரவாளர்களால் தற்போதுவரை அழைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவரது அரசியல் பயணத்தில் பல்வேறு நலத்திட்டங்கள்

மக்களது நலன்களைக் கருத்தில்கொண்டு முன்வைக்கப்பட்டன. அவற்றில் சில முக்கியமான திட்டங்கள் வருமாறு,

தமிழ்நாட்டில் தேர்தல் மூலமாக வெற்றி பெற்ற முதலாவது பெண்ணாகக் கருதப்படுகின்ற இவர் முதலமைச்சராகப் பதவியேற்றதும் முதல் போட்ட உத்தரவானது தமிழ்நாட்டில் காணப்பட்ட மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்ற மதுவினை இல்லாதொழிக்க வேண்டும் என்பதே. இவ்வறிப்பினை தான் முன்வைத்ததன் மூலமாக 400 கோடி ரூபா இழப்பினை அச்சமயத்தில் சந்தித்ததாகத் தனது 2016 இல் நடைபெற்ற சட்டசபைக்கான தேர்தல் பிரச்சாரத்தின்போது சென்னையில் 09.04.2016இல் தெரிவித்தார். *(ஜெயா தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு)*இதன்படி தமிழகம் முழுவதும் 3589 மலிவு விலை மதுக்கடைகள் ஒழிக்கப்பட்டன.*(அறிவகராஜா.க., 2011)* செங்கல்பட்டு என்ற மாவட்டத்திற்குப் புரட்சித்தலைவரது பெயரினைச் சூட்டுவதற்கான பணிப்புரையினை வழங்கினார். அறிஞர் அண்ணாவினது மனைவிக்கு ரூபா 5,00,000 நிதியுதவியினை வழங்கினார். அண்ணா சமாதியானது ரூபா 70,00,000 செலவில் சீரமைக்கப்படுமென அறிவித்தார். காவேரிப் பிரச்சினையினைக் காரணம் காட்டி எம்.ஜி.ஆர் சிலைக்கருகில் உண்ணவிரதம் இருந்தார். திரைப்பட நகர் அமைக்கப்பட்டமை, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினை 1995இல் நடாத்தியமை, பெண் சிசு வதையினைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள், தொட்டில் குழந்தைத்திட்டம், கருத்தடை செய்வோருக்கு உதவிப் பணம் வழங்குதல், குழந்தைகள் பெறாமல் சத்திர சிகிச்சை மேற்கொண்டால் இருக்கின்ற பெண் குழந்தைகளின் பெயரில் பணம் வைப்பிலிடுதல், பெண்களது திருமண வயதினை 21ஆக அதிகரித்தல், மகளிருக்கான சுய உதவிக்குழுக்களை ஆரம்பித்தல், மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கப்படுதல், இலவசத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல், இலவசப் பாடநூல்கள் வழங்குதல், ஆதிதிராவிட மக்களுக்குக் கல்வித் தொகை மற்றும் கல்விக்கடன்கள் வழங்குதல், ஏழைகளுக்கு இலவச வேட்டி சேலைகள் வழங்குதல், ஆதி திராவிட மக்களுக்கு இலவச குடியிருப்புக்களை வழங்குதல், கணவன் இறந்தால் மனைவிக்கு உதவும் திட்டம்,கந்து வட்டி ஒழித்தல், கட்டாய மத மாற்றச் சட்டத்தினை அகற்றுதல், எம்.ஜி.ஆர் நினைவுச் சத்துணவுத்திட்டம், திருமணஉதவித்திட்டம், சமையல் எண்ணை வழங்கும் திட்டம், குறைந்தவிலை அரச கேபிள் இணைப்பு, மழைநீர் சேகரிப்புத்திட்டம், மீன் வளத்தினை மேம்படுத்தத்திட்டம். முதியோர் உதவி வழங்கும் திட்டம், மாணவர்களுக்கு மடிக்கணனி வழங்குதல், கல்விக்கு அதிக தொகையினை ஒதுக்குதல், பல கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டமை,வெளிநாடுகளுக்கு ஏழை மாணவர்கள் சென்று கற்பதற்கான வசதி, இலவச பாஸ் திட்டம், கிராம, நகரங்களுக்கான வடிகல் திட்டங்கள், காலணி வழங்கும் திட்டம், மிக்சி, கிறைண்டர், மின்விசிறி வழங்குதல், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், விலையில்லா மிதி வண்டித் திட்டம்அம்மா கன்ரின் மூலமாக ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்புக்களும் ஏழைகளுக்கு குறைந்த விலையில் மதிய உணவும் வழங்குதல், முதியோருக்கு உதவித் தொகை, அம்மாகுடிநீர், அம்மா சீமெந்து, அம்மா மருந்தகங்கள், பண்ணைப் பசுமை காய்கறி விற்பனை நிலையங்கள், அம்மா குழந்தைகள் நலத்திட்டம், 24 மணிநேர அம்மா சேவை, மாற்றுத்திறனாளிகளுக்கு வாகனங்கள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள், மனிதவள மேம்பாட்டுத் திட்டங்கள், மருத்துவப் பணிகளுக்கான தேர்வு வாரியத்தின் உருவாக்கம், தாய்திட்டம், நியாயவிலைக் கடைகள், நீர்த்தேக்கத் தொட்டிகள்,இலவச கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்குதல், நகரும் கால்நடை மருத்துவ மையங்கள், மீனவர் நலன்கள் காக்கும் திட்டங்கள், முதியோருக்கான நலத்திட்டங்கள்,ஆரம்ப சுகாதார மையங்கள்போன்ற இன்னோரன்ன பல திட்டங்கள் தேர்தல் காலங்களை ஒட்டியும் அதற்கு முன்னராகவும் அவரால் அறிவிக்கப்பட்டும் செயற்படுத்தப்பட்டும் வந்துள்ளன.*(சட்டப்பேரவையில் ஆற்றப்பட்ட உரைகளின் தொகுப்புக்கள் 1991-2016, திட்ட அறிக்கைகள்)*

இவர் பதவியில் இருந்த கடந்த 5 வருடங்களில் (2011-2016)ரூபா 84,668 கோடி கல்விக்காக ஒதுக்கப்பட்டதாகவும் 221 தொடக்கப் பள்ளிகள், 810 நடுவுநிலை உயர்நிலைப் பள்ளிகள், 402 உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் தமிழக மீனவரது பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு அமைப்பொன்றினது அவசியத்தினை வலியுறுத்தி கடிமொன்றினைப் பிரதமருக்கு எழுதியுள்ளார்.புத்தாண்டினை மறுபடியும் சித்தரை வருடமாகக் கொண்டாட சட்டசபையில் அறிவிப்புச் செய்துள்ளார்.*(ஜெயா தொலைக்காட்சி செய்தி, 2016 மார்ச்சு 22, மாலை 7.30)*தற்போதும் பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றாரென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் இத்தகைய இவரது அறிவிப்புக்கள் எல்லாமே சரியான முறையில் நிறைவேற்றப்பட்டதா? என்பதும் வினாவிற்குரியதே. காரணம் இவற்றில் சில வெறும் அறிவிப்புக்களே என்பது எதிர்கட்சிகளது குற்றச்சாட்டுக்களாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தேர்தல் காலங்களில் முன்வைக்கப்பட்ட மின் பிரச்சினைக்கான தீர்வு, கச்சதீவுப் பிரச்சினை, தமிழக மீனவர் பிரச்சினை, குடிநீர் பிரச்சினை போன்ற சில நடவடிக்கைகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

**இராஜதந்திரச் செயற்பாடுகள்**

1989 - 2015 வரை இவர் சட்டமன்ற உறுப்பினருக்காகப் போட்டியிட்ட 7 தேர்தல்களில் ஒன்றினைத் தவிர எல்லாவற்றிலும் பெரும்பான்மையான வாக்குகளினால் வெற்றி பெற்றவர். இரு தடவைகள் இவரது பதவியானது சில காலத்திற்கு முடக்கப்பட்டிருந்தது. அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை. நண்பனும் இல்லை. அது ஒரு சாக்கடை என்பது ஒரு கதை. இதனைத் தமிழகத்தில் நடைபெறுகின்ற சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் நெருங்கி வருகின்ற காலங்களில் அவதானிக்க முடியும். ஒரு தேர்தல் காலத்தில் ஒருவரைப் பற்றிக் கடுமையான முறையில் விமர்சிப்பவர்கள் மறு தேர்தல் வரும்போது நட்புப் பாராட்டுவார்கள். மக்களும் அரசியல்வாதிகளது சொற்களின்படியே நடப்பார்கள். ஒரு தேர்தலில் ஒரு கட்சியுடன் கூட்டணி அமைக்கும் கட்சிகள் மறு தேர்தலில் பிறிதொரு கட்சியுடன் கூட்டணி அமைக்கும். இது தமிழகத்திற்கு மட்டுமன்றித் தென்னாசிய நாடுகளது இயல்பும்கூட

ஜெயலலிதாவினைப் பொறுத்து அவரது அரசியல் நகர்வுகளும், அணுகு முறைகளும் இராஜதந்திரம் மிக்கவை. அல்லாவிடில் குடும்ப உறுப்பினர்களையே அதிகளவில் உள்வாங்கி அரசியல் என்ற காயினை நகர்த்தும் தி.மு.க விற்குச் சவால் விடுகின்ற வகையில் தமிழ்நாட்டினுடைய தலைவியாக அவரால் வலம்வர முடியுமா? அரசியல் சாணக்கியராகத் திகழும் கருணாநிதியினை சிறை பிடித்திருக்க முடிந்திருக்குமா? அரசியலில் இவருக்கென தனிப்பட்ட பல குணஇயல்புகள் உள்ளன. எவரையும் எளிதில் நம்பமாட்டார். திடநம்பிக்கை, மனஉறுதி, அமைச்சர்களையும் சட்டசபை உறுப்பினர்களையும் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற சிறந்த தலைமைத்துவம், துணிச்சல், அசட்டையான முடிவுகள் எடுக்கின்ற தன்மை எல்லாமே அவரிடம் இயல்பாகவே குடிகொண்டுள்ளன. யாரையும் அது எவரென்றாலும் தனது கட்டுப்பாட்டினைக் கடந்துவிட்டால் அவர்களைத் தூக்கியெறியவும் தயங்கமாட்டார். இதற்கு அவரது நீண்டகால நண்பியான சசிகலாவிற்கும் அண்மையில் அவருடய நீண்டகால நம்பிக்கைக்குப் பாத்திரமான ஓ.பன்னீர்செல்வத்திற்கும் நடந்த சம்பவங்களைஆதாரமாகக் குறிப்பிடலாம். அவர்களுக்குப் பாடத்தினைப் போதித்த பின்னர் திருப்பியும் அவர்களைச் சேர்த்துக்கொள்ளுவார்.

ஓ.பன்னீர்செல்வம் ஜெயலலிதாவினுடைய நீண்டகால விசவாசியாக விளங்கியவர். அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் அப்படியே ஜெயலலிதாவிற்கு தெரியப்படுத்துபவர். ஜெயலலிதா இரண்டு தடவைகள் ஊழல் வழக்குகளில் சிக்கிச் சிறை சென்ற சமயத்தில் பதில் முதலமைச்சராகக் கடமையாற்றியவர். நிதியமைச்சராகவும் காணப்பட்டவர். மறைமுகமாகவே அடுத்த முதல்வர் என்று கருதப்பட்டவர். அப்படிப்பட்டவரது செல்வாக்கானது அதிகரித்து வருவதனை அறிந்து அவர்மீதும் பிற அமைச்சர்களான நத்தம் விசுவநாதன், பழனியப்பன் போன்ற சிலர் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இவருடன் தொடர்பினை ஏற்படுத்தினால் தமக்குப் பிரச்சினை வந்துவிடலாம் என எண்ணி அவரது கட்சியினரே அவருடன் சிலகாலம் தொடர்புகளை முறித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தனது கட்சி உறுப்பினர்களையும் தாண்டிக் கூட்டணிக்கட்சிஉறுப்பினர்களையும்கூட கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்ற ஆற்றல் கொண்டவர். மீறினால் தூக்கியெறிந்துவிடுவார். 2011 தேர்தலின் கூட்டணியான விஜயகாந்தினது கூட்டணியினைச் சிலகாலத்திலேயே கழற்றிவிட்டமையினை இதற்கு ஆதாரமாகக் குறிப்பிடலாம்.கடந்த 5 ஆண்டுகள் பதவிக்காலத்தில் தனது அமைச்சரவையினை 20 தடவைகள் மாற்றியவரென்ற பண்பினைக் கொண்டவர் ஜெயலலிதா.*(வீரகேசரி 2016 மாச்சு 6)*

அரசியலே தனது முழுமையான தொழில் என்பதனை மதுரை தமுக்கம் மைதானத்தில் 1986இல் நடைபெற்ற எம்.ஜி.ஆர் இரசிகர் மன்றத்தினது மாநாட்டில் வெள்ளியிலான அழகிய செங்கோலொன்றினை எம்.ஜி.ஆருக்கு வழங்கியதன் மூலமாக நிரூபித்தார். இதன் மூலமாக தன்னை அவரது அரசியல் வாரிசாகவும் மறைமுகமாக அறிவித்தார். இவரது பேச்சிலேயே கம்பீரம் இருக்கும். அவரது விரல் அசைவில் ஆளுமையின் பிரதிபலிப்பினை அடையாளம் காணமுடியும். அதில் நான் என்ற தொனிப்பொருளே மேலோங்கியிருப்பதனை அவதானிக்க முடியும். கட்சி உறுப்பினர்களிடமிருந்து பணிவினையும் அடக்கத்தினையும் எதிர்பார்ப்பவர். அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரதும் குறைபாடுகளை அறிந்து அதனையே தனது சாவியாகவும், அவர்கள் எல்லையினை மீறுகின்றபோது அதனை அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்ற கருவியாகவும் வைத்துள்ளார். தனக்குப் பின்னர் எவரையும் அரசியல் வாரிசாக அறிவிக்காதவர். அவரது செயற்பாடுகள் ஒவ்வொன்றும் மக்களைக் கவரும்

வகையில் எம்.ஜி.ஆரினை நினைவுபடுத்துவதாக அமையும். காரணம் அவருக்காகவே கட்சியினையும் இவரையும் ஆதரிக்கின்ற மக்கள் கூட்டமானது தற்காலத்திலும் அதிகம் உள்ளனரென்பதனைதெரிந்து வைத்துள்ளார். எதனையும் தான் நினைத்தபடி துணிந்து செய்கின்ற ஆற்றல்கொண்ட முதல்வராக இவர் விளங்குகின்றார். சட்டசபையில் தனது கட்சி சார்பான உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்ற ஆற்றல் கொண்டவராகத் திகழ்கின்றார். என்ன பேச வேண்டுமாயினும் அவரது அனுமதியினைப் பெற்றே பேச வேண்டும். நன்றாகக் குனிந்து அவருக்கு மதிப்பளிக்க வேண்டும். இதனை அவர் எதிர்பார்க்கின்றாரோ தெரியவில்லை. ஆனால் அவரது கட்சி சார்பான அமைச்சர்களும் சட்டசபை உறுப்பினர்களும் அவ்வாறே செய்கின்றனர். ஒரு எதிர்கட்சி சட்டசபை உறுப்பினர்கள் இவரது கட்சியினைச் சார்ந்த சட்டசபை உறுப்பினர்கள் மேசையினைத் தட்டுவதற்காகவே மட்டும் உரிமை பெற்றவர்களே தவிர மற்றபடி பொம்மைகளே என்றார்.உண்மையில் அவர் அவர்களை அவ்வாறு நடத்தாது விட்டால் அவர்கள் தனக்கு எதிராக வருங்காலங்களில் யாது செய்வார்களென்றும் அவருக்குத் தெரியும்.மொத்தத்தில் இவரது தன்னம்பிக்கை, தைரியம், தலைமைத்துவம் என்பவை தமிழக மக்களால் விரும்பப்படுகின்றன.

ராஜபாளையம் என்ற இடத்தில் உள்ள ஒரு தொண்டர் ஜெயலலிதாவினை அம்மன், சரஸ்வதி, கிருஸ்ணர் போன்ற இந்துத் தெய்வங்களது வேடங்களில் சித்தரித்தப் பதாகைகளை வைத்துள்ளதுடன் அவர் ஜெயலலிதாவிற்கு ஆலயம் அமைக்கின்ற பணியிலும் ஈடுபட்டு வருகின்றார். *(வீரகேசரி, 2016 பெப்ரவரி 28*) ஏற்கனவே எம்.ஜி.ஆருக்காக ஆலயத்தினைக்கட்டி வழிபாடு செய்து வருகின்ற தொண்டர் ஒருவரும் தமிழ்நாட்டில் உள்ளார் என்பதும் தெரிந்ததே.

**முதலமைச்சராகப் பதவி வகித்த காலப்பகுதிகள்**

1991-1996
2001மே-2001 செப்ரெம்பர்
2002-2006
2011 செப்ரெம்பர் 27 2014
2015மே-2016
2016மே - தற்போது வரை

**சினிமாத்துறையில் ஜெயலலிதா**

அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வருகின்ற பெண் ஒருவரினால் சினிமாவிலும் அதேயளவு செல்வாக்கினைப் பெற்றிருக்க முடிந்தது என்றால் அது ஜெயலலிதாவினால் மட்டுமே உலக வரலாற்றில் முடிந்திருக்கின்றது. இவர் தெலுங்கு,ஹிந்தி,கன்னடம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சுமார் 125 இற்கும் அதிகமான படங்களில் நடித்திருக்கின்றார;.*(https://en.wikipedia.org/wiki/**Jayalalitha**a)* எபிசில் என்ற ஆங்கிலப் படத்தின் மூலமாகத் தனது திரையுலகப் பயணத்தினை ஆரம்பித்த ஜெயலலிதா தொடர்ந்து 1964இல் வெளியான கன்னடப் படமான சின்னடா கொம்பே அவருக்கு சிறந்த நடிகை என்ற பெயரினைக் கொடுத்ததுடன் அது அவருக்கு முதலாவது இந்தியத் திரைப்படமாகவும் அமைந்தது. தமிழல் ஶ்ரீதரது இயக்கத்தில் இவர் நடித்த வெண்ணிற ஆடை என்ற திரைப்படம் இவருக்கு முதலாவது திரைப்படமாக அமைந்தது.

இவர் அக்காலப்பகுதியில் பிரபல்யமாக விளங்கிய நடிகர்களான எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெய்சங்கர், எஸ்.எஸ்.ஆர், சிவகுமார், முத்துராமன், ரவிச்சந்திரன், ஜெமினி , ஏ.வி.எம்.ராஜன், நாகேஸ்வரராவ், என்.டி.ராமராவ், தர்மேந்திரா என்பவர்களுடன் ஜோடியாக நடித்தது மட்டுமன்றி கமல்ஹாசன், ரஜனிகாந்த் என்பவர்களுடனும் சினிமாவில் தோன்றியவரென்பது குறிப்பிடத்தக்கது. இறுதியாக சரத்பாபுவுடன் ஜோடியாக நடித்திருந்தார். இவர்களுடன் இவர் நடித்திருந்தாலும் எம்.ஜி.ஆருடன் நடித்த 28 படங்களும் இவருக்கு நல்ல பெயரினைப் பெற்றுக்கொடுத்ததுடன் அரசியலில் நுழைவதற்கான வாய்ப்பினையும் இத்தகைய திரைப்படங்கள் அவருக்கு வழிசமைத்தன. சரோஜாதேவிக்குப் பின்னதாக எம்.ஜி.ஆருடன் அதிக படங்களில் ஜோடி சேர்ந்து நடித்தவர் ஜெயலலிதா. தற்போதும் இத்திரைப்படங்களே அவரது நீடித்த அரசியல் வாழ்விற்குத் துணையாக நிற்பதும் குறிப்பிடத்தக்கது. சரோஜாதேவிக்குப் பின்னர் அதிக படங்களில் எம்.ஜி.ஆருடன் ஜோடியாக நடித்தவர் ஜெயலலிதா என்பது அவதானிக்கத்தக்கது.அவருடன் முதன் முதலாக ஜோடி சேர்ந்து நடித்த நடித்த ஆயிரத்தில் ஒருவன், அடிமைப்பெண்,கணவன், தாய்க்குத்தலைமகன், காதல் வாகனம், முகராசி, இரகசியப் பொலிஸ் 115, குமரிப்பெண், கண்ணன் என் காதலன். எங்கள் தங்கம், புதிய பூமி, தனிப்பிறவி,காவல்காரன், இராமன் தேடிய சீதை, குமரிக்கோட்டம், நீரும் நெருப்பும், குடியிருந்த கோயில், மாட்டுக்கார வேலன், அன்னமிட்டகை,என் அண்ணன்,அரசகட்டளை, ஒளிவிளக்கு போன்ற படங்கள் நல்ல பெயரினை அவருக்குப் பெற்றுக் கொடுத்தன.

அவ்வாறே சிவாஜியுடன் இவர் நடித்த படங்களான தெய்வமகன், சவாலேசமாளி, எங்கிருந்தோ வந்தாள், பட்டிக்காடா பட்டணமா, ராஜா, கலாட்டா கலியாணம், நீதி, பாதுகாப்பு, அன்பைத்தேடி, அவன்தான் மனிதன், மோட்டார் சுந்தரம்பிள்ளை, பாட்டும் பரதமும், எங்கமாமா, தாய், சித்ராபௌர்ணமி,கந்தன் கருணை,தர்மம் எங்கே, எங்க ஊர் ராஜா என்பனவும் இவரது பெயர் சொல்லும் வகையில் அமைந்திருந்தன. சில படங்களில் இரட்டை வேடங்களிலும் தோன்றியுள்ளார்.*(நேர்காணல், சுடலைமுத்து, பாளையங்கோட்டை)*உண்மையில் எம்.ஜி.ஆருடன் இவர் நடித்த படங்கள் அரசியலில் நுழையவும் சிவாஜியுடன் இவர் நடித்த படங்கள் இவரது நடிப்பினது திறமையினை வெளிக்காட்டி திரையுலகில் செல்வாக்கினைப் பெறவும் வழிசமைத்தன. பிற நடிகர்களுடன் தோன்றிய படங்களில் நிலவே நீ சாட்சி, சூரியகாந்தி, நான் போன்ற திரைபடங்கள் இவருக்கு நல்ல பெயரினை ஏற்படுத்திக் கொடுத்தன.

1980இல் இவர் நடித்து வெளியான நதியைத் தேடிவந்த கடல் என்ற திரைப்படமே இவருடைய இறுதிப்படமாக அமைந்தது. அவ்வகையில் 1964-1972 காலப்பகுதியில் சினிமாத்துறையில் எவரும் எட்ட முடியாத உச்சத்தில் இருந்தவர் ஜெயலலிதா என்பது அவதானிக்கத்தக்கது. சரோஜாதேவி, சாவித்திரி, தேவிகா, விஜயகுமாரி ஆகியரது செல்வாக்கு திரையுலகில் வீழ்ச்சியடைந்து வந்த இடைவெளியினைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அத்தகைய வெற்றிடத்தினை நிரப்பியவர். கே.ஆர்.விஜயா, காஞ்சனா, வாணிஸ்ரீ, மஞ்சுளா, ராஜஸ்ரீ, வெண்ணிறாடை நிர்மலா என்பவர்கள் இவரது சமகால நடிகைகளாகக் காணப்பட்டனர். இத்தகையதொரு பின்னணியில்தான் கலைச்செல்வி என்ற பட்டப்பெயரினையும் சினிமாத்துறையில் பெற்றுக்கொண்டார். சிறந்த நடிகைக்கான விருதினை மாநில அளவில் பல தடவைகள் பெற்றுள்ளார்.

**இலங்கை இனப்பிரச்சினையில் ஜெயலலிதா**

தமிழக அரசியல்வாதிகளுக்கு 1980களின் பின்னராக அரசியல் பேசுவதற்கும் தேர்தல் களத்திற்கும் ஆயுதமாக அமைந்தது இலங்கைத் தமிழர் பிரச்சனை. குறிப்பாக 1987இன் பின்னராக இது தீவிரமடைந்தது. எம்.ஜி.ஆர் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஈடுபாடு காட்டிய தலைவர்களில் முதன்மையான இடத்தில் வைத்துப் பேசப்படுகின்றார். அவர் முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் ஈழத்தமிழ் மக்களுக்காக தன்னால் முடியுமான சேவைகளை இதய சுத்தியுடன் செய்தவர் என்பதனை உலகறியும். ஆனால் தற்காலத்தில் ஒரு சில விசுவாசிகளைத் தவிர ஏனைய அரசியல்வாதிகள் உண்மையான அக்கறையினை ஈழத்தமிழர் பிரச்சினையில் காட்டுவதாகத் தெரியவில்லை.

தேர்தல் வருகின்ற காலங்களில் அங்கு களத்திலிருக்கின்ற பிரதான கட்சிகளினால் இவ்விடயமாகச் சில வாக்குறுதிகள் வழங்கப்படுவதும் அது முடிவடைந்ததன் பின்னராக அது மறக்கப்படுவதும் வழமையானதொன்றே. 2011இல் நடைபெற்ற தமிழகத் தேர்தலில் ஜெயலலிதாவினுடைய பிரச்சாரங்களிலொன்று ராஜீகாந்தியினது கொலையுடன் தொடர்புபட்டவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை, கச்சதீவுப் பிரச்சினை, மீனவர் பிரச்சினை, மற்றையது இலங்கைக்கு இந்திய இராணுவத்தினை அனுப்பி ஈழத்தமிழரைக் காப்பது. ஆனால் 2016இல் தேர்தல் வரப்போகின்றது. இவ்விடயமாக திடமான எவ்விதமான நடவடிக்கைகளும் தற்போதுவரை அவரினால் எடுக்கப்படவில்லை. பொதுவாக அரசியல்வாதிகள் என்ற நிலைப்பாட்டில் ஒரு சிலரைத் தவிர எல்லோருக்கும் தமிழக மக்களது வாக்குகளைப் பெறுவதற்கு ஈழத்தமிழர்கள் ஒரு கருவியே என்பதே உண்மை.நடைபெறப் போகின்ற தேர்தலிலும் அம்மாவிற்கு வாக்களித்தால் ராஜீவ் காந்தியின் இறப்புடன் தொடர்பான குறிப்பிட்ட நபர்கள் விடுதலை அடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அ.இ.அ.தி.க சேர்ந்த நபரொருவர் பிரச்சார மேடையொன்றில் உரையாற்றியுள்ளார்.*(வீரகேசரி, 2016 மார்ச் 06)*அவ்வாறே அருப்புக்கோட்டையில் நடைபெற்ற 2016 இல் நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சராத்தின்போது தான் ஆட்சிக்கு வந்தால் கச்சதீவினை எப்பாடுபட்டாவது உச்சநீதிமன்றத்தினது உதவியுடன் மீட்பதாகக் கூறியிருந்தார். *(ஜெயா தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பான உரை, 16.04.2016)*

**பெற்ற பட்டங்களும் விருதுகளும்**

இவர் பெற்ற பட்டங்கள் விருதுகளில் முக்கியமானவை பின்வருமாறு

1. 1972இல் தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்ட கலைமாமணி விருது

2. 1991இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் இலக்கியத்திற்காக வழங்ப்பட்ட சிறப்புக் கலாநிதிப்பட்டம்

3. உக்ரைன் சர்வதேச மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தங்க மங்கை விருது.

4. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினால் கடிதங்களுக்காக வழங்கப்பட்ட கலாநிதிப்பட்டம்

5. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கிய அறிவியலுக்கான கௌரவக் கலாநிதிப்பட்டம்

6. சட்டத்திற்கான கௌரவ கலாநிதிப்பட்டத்தினை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் பல்கலைக்கழகம் வழங்கியது.

7. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் கடிதங்களுக்கான கலாநிதிப்பட்டத்தினை வழங்கியது.

8. தமிழ்நாடு எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் அறிவியலுக்கான கௌரவக் கலாநிதிப்பட்டத்தினை வழங்கியது.*(https://en.wikipedia.org/wiki/**Jayalalitha**a)*இவற்றினைவிட சினிமாத்துறையில் இவர் இருந்த சந்தர்ப்பத்தில் ஏராளமான விருதுகளைத் தனதாக்கிக் கொண்டவரென்பது குறிப்பிடத்தக்கது.

**ஊழல் வழக்குகளும் ஜெயலலிதாவும்**

இதுவரை காலமும் தமிழகத்திலிருந்த முதலமைச்சர்களில் அதிக வழக்குகளில் மாட்டிக்கொண்டவரும், இவ்விடயமாக இரு தடவைகள் சிறை சென்றவராகவும் ஜெயலலிதா கருதப்படுகின்றார். பதவியில் இருக்கின்றபோதே சிறையில் தள்ளப்பட்டவர் என்ற பெயரும் இவருக்கு உண்டு. அவ்வகையில் இவர்மீது அளவிற்கு அதிகமான சொத்துக் குவிப்பு வழக்கு, வருமானவரி கணக்கு வழக்கு,டிட்கோ - ஸ்பிக் பங்குகள் வழக்கு, பிறந்தநாள் பரிசு வழக்கு, நிலக்கரி இறக்குமதி வழக்கு, டான்சி நில வழக்கு, வண்ணத்தொலைக்காட்சி வழக்கு என்பன இவ்வாறு இவர்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளாகும். இருப்பினும் பல வழக்குகளிலிருந்து இவர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மிக அண்மையில் தன்னுடைய 68ஆவது பிறந்தநாளினை 5 நாட்கள் கொண்டாட ஏற்பாடுகள் செய்தார். இதன் பொருட்டு அதிகளவு அரச பணம் செலவு செய்யப்பட்டதாக இவர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனையொட்டி 68,000 மரக்கன்றுகள் நடுதல், அன்னதானங்கள், இலவசப் பொருட்களது விநியோகம் என ஏற்பாடுகள் இவரது கட்சி ஆதரவாளர்களினால் செய்யப்பட்டன.*(வீரகேசரி, 2016 பெப்ரவரி28*) இவர் தலைமைக்கழகத்திற்கு அண்மையில் வந்த சமயத்தில் விளம்பரப் பலகைகள் வைத்தும், கட்டவுட்டுக்கள் வைத்தும், அலங்கார வளைவுகள் வைத்தும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஸ்ரிக்கர் கலாசாரத்தினை தமிழ் நாட்டில் உருவாக்கியவர் என்ற குற்றச்சாட்டும் இவர் மீது உள்ளது. இவற்றுக்கெல்லாம் மக்கள் பணம் செலவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. அத்துடன் மக்களை சந்திப்பதில்லை. சென்னைக்கு வருவதில்லை. போன்ற குற்றச்சாட்டுக்களும் இவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன. கர்நாடகா அரசாங்கம் உச்சநீதிமன்றத்தில் இவர் மீது தொடுக்கப்பட்ட வழக்கில் விடுவிக்கப்பட்டிருந்தாலும்கூடதொடர்ந்த அவ்வரசு சுப்பிறீம் கோட்டில் மேன் முறையீட்டினை செய்தமையின் பின்னணியில் தொடர்ந்து வழக்க விசாரணை அங்கே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**2016 சட்டசபைத் தேர்தலும் ஜெயலலிதாவும்**

தமிழகச் சட்டசபைக்கான தேர்தல் 2016 மே மாத நடுப்பகுதியில் நடைபெற்ற சூழலில் யாருக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் என்பதும், யாருடன் யார் கூட்டணி அமைப்பதென்பது பற்றியும் பலராலும் பல்வேறு ஊகங்கள் முன்வைக்கப்பட்டன. இம்முறை என்றும் இல்லாதவாறு 5 முனைப் போட்டி காணப்படுகின்றது. அ.இ.அ.தி.மு.க, தி.மு.க,பாட்டாளி மக்கள் கட்சி (பா.ம.க), பாரதீய ஜனதாக் கட்சி(பா.ஜ.க),மக்கள் நலக் கூட்டணி (ம.ந.கூ) என்றவாறு அமைந்த கட்சிகளின் கூட்டணியால் தேர்தல் களமானது பரபரப்படைந்துள்ளது. அதேநேரத்தில் தமிழகத்தின் முக்கியமான இரண்டு கட்சிகளும் (அ.இ.அ.தி.மு.க, தி.மு.க) இவ்விடயமாக ஆட்சியினைப் பிடிப்பதில் பல்வேறு நடவடிக்கைகளில்ஈடுபட்டு வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொதுவாகவே தமிழக வரலாற்றினைப் பார்த்தால் எம்.ஜி.ஆர் அவர்களது காலத்தினைத் தவிர எந்த ஒரு அரசியல் கட்சியும் தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் ஆட்சியினைக் கைப்பற்றவில்லை. மாறி மாறி இவை 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஆட்சியில் அமருவது வழக்கமாகும். காரணம் அக்குறிப்பிட்ட காலப்பகுதியில் (5 வருடங்கள்)ஆட்சியில் அமர்ந்தவர்களினால் மக்களைத் திருப்திப்படுத்த முடியாமல் போனமையே ஆகும். அப்படிப் பார்த்தால் இம்முறை தி.மு.கவுக்கே அதிக வெற்றி வாய்ப்புக்கள் இருப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் இம்முறை நடைபெற்ற

இத்தேர்தலானது வழமை போன்று அத்தகைய முடிவினைத்தரவில்லை. காரணம் குறிக்கப்பட்ட 5 வருட இடைவெளியில் ஜெயலலிதாவினுடைய செல்வாக்கானது மக்கள் மத்தியிலிருந்து எதிர்பார்க்கின்ற அளவிற்குச் சரிந்ததாகத் தெரியவில்லை. மாறாக அதிகரிக்கவும் இல்லை.இம்முறை எதிரணியினரால் அமைக்கப்பட்டுள்ள அரசியல் கூட்டுக்கள் ஜெயலலிதாவிற்கே வெற்றிக்கான வாய்ப்புக்கள் இருப்பதனைக் காட்டிநின்றன.

தமிழ் நாட்டில் மேற்கூறப்பட்ட இரண்டு பிரபலமான கட்சிகள் ஆட்சியில் மாறி மாறி அமர்ந்தாலும் அவர்களது ஆட்சியில் சிறிய கட்சிகளின் செல்வாக்கும் அதில் இருக்கும். அவற்றில் அகில இந்தியக் காங்கிரஸ், தே.மு.தி..க, பாரதிய ஜனதா, பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள்,மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்(ம.தி.மு.க), இந்தியன் முஸ்லிம் லிக் போன்ற சில கட்சிகள் குறிப்பிடத்தக்கன. திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பொறுத்தவரை இம்முறை அது காங்கிரஸ், இந்தியன்யூனியன் முஸ்லிம் லீக், விவசாயிகள் தொழிலாளர் கட்சி, மனிதநேய மக்கள்கட்சி, பெருந்தலைவர் மக்கள் கட்சி, சமூக சமத்துவ கூட்டுப் படை, புதிய தமிழகம் கட்சிமக்கள்தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் போன்ற சில சொல்லக்கூடிய கட்சிகளே அது கூட்டணியினை அமைத்தபிரதான கட்சிகளாக உள்ளன. இவற்றில் காங்கிரசே பிரதான கட்சியாக உள்ளது. ஏனைய கட்சிகள் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு இல்லை. காங்கிரசிற்கு 41 இடங்கள் ஒதுக்கப்பட்டன இந்தியன் யூனியன் முஸ்லிம் லிக் கட்சிக்கு 4 இடங்களும் மனித நேய மக்கள் கட்சிக்கு 5 இடங்களும்புதிய தமிழகம் கட்சிக்கு 4 இடங்களும் மக்கள் முற்போக்குத் திராவிடர் கழகத்திற்கு 3 இடங்களும்குறிப்பாக ஒதுக்கப்பட்டன.*(வேட்பாளர் பட்டியல், தினத்தந்தி, 10.04.2016)*ஏனையவற்றுக்குத் தலா ஒரு இடமே கொடுக்கப்பட்டுள்ளது.இத்தகைய குறிக்கப்பட்ட சில கட்சிகள் சில குறிப்பிட்ட பகுதிகளிலேதான் செல்வாக்கினைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் அ..இ.அ.தி.மு.க ஆனது முக்கியமான சிறிய கட்சிகள் எவற்றுடனும்பெருமளவிற்கு கூட்டு வைக்கவில்லை. இருப்பினும் மனிதநேய ஜனநாயக்க கட்சி,தமிழ் மாநில முஸ்லிம் லீக்,முக்குலத்தோர் புலிப்படை, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை, இந்தியக் குடியரசுக்கட்சி என்பவை ஜெயலலிதாவிற்கு ஆதரவு தருவதாக அறிவித்திருந்தன.

ஜெயலலிதாவினுடைய கட்சியானது சென்றமுறை விஜயகாந்தினது தே.மு.தி.க என்ற கட்சியினையே தன்னுடன் பிரதான கூட்டாக இணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அச்சமயத்தில் அக்கட்சியானது ஓரளவிற்குத் தென்மாநிலங்களது மக்கள் மத்தியில் செல்வாக்குடன் திகழ்ந்த கட்சியாகக் காணப்பட்டது. இதனால் தி.மு.க படுதோல்வி அடைய வேண்டிய சூழல் ஏற்பட்டது.ஆனால் இத்தேர்தலில் விஜயகாந்தினது கட்சியிலிருந்த பல தொண்டர்கள் அக்கட்சியிலிருந்து விலகி வந்ததும் அவர்களில் அனேகர் தி.மு.கவுடன் இணைந்ததும்சமத்துவ மக்கள் கட்சித் தொண்டர்கள் பலரும்கூட அக்கட்சியிலிருந்து விலகித் தி.மு.கவில் இணைவதும் தி.மு.க விற்குப் பலமானதாகவே அமைந்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. இருப்பினும் நடைபெற்றஇத்தேர்தலில் ஜெயலலிதாவிற்கு வெற்றிக்கான சில சாதகமான சூழலை இத்தகைய சிறிய கட்சிகளது நடவடிக்கைகள் சில மறைமுகமாக வழங்கியிருந்தமை அவதானிக்கத்தக்கது. எல்லாமாக 234 தொகுதிகளில் 227 தொகுதிகளில் அ.இ.அ.தி.மு.க போட்டியிடுகின்றது. 7 தொகுதிகள் மட்டுமே கூட்டணிக் கட்சிகளுக்கு வழங்கியிருந்தது.ஜெயலலிதா டாக்டர் ராதாகிருஸ்ணண் நகரில் (ஆர்.கே.நகர்) போட்டியிட்டு பெரு வெற்றியனைப் பெற்றிருந்தார்.அவரது கட்சியில் 31 பெண் வேட்பாளர்களுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.18 அமைச்சர்கள் மீளவும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். 11 பேருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது.ஓ.பன்னீர் செல்வத்திற்கும், நத்தம் விஸ்வநாதனுக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

இம்முறை தே.மு.தி.க தனித்துத் தேர்தலில் போட்டியிடுமென அதன் தலைவர் விஜயகாந்த் முதலில் அறிவித்திருந்போதும்பின்னர் அவர் மக்கள் நலக் கூட்டணியுடன் சேர்வதாகத் தெரிவித்திருந்தார். பாண்டவர் அணி என அழைக்கப்படுகின்ற இவ்வணியில் வை,கோபால்சாமியினது மறுமலர்ச்சித் தராவிட முன்னேற்றக் கழகம் ம.தி.மு.க மற்றைய பிரதான கட்சியாக காணப்பட்டது.மேலும் இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய லீக் போன்ற கட்சிகளும் இக்கூட்டணியில் பங்கு வகித்திருந்தன.அது தி.மு.கவிற்குத் தலையிடியினையும் அதேநேரத்தில் அது ஜெயலலிதாவிற்கு ஓரளவு மகிழ்ச்சியினைத் தருவதாகவும் இருந்தது. காரணம் இதனால் அ.இ.அ.தி.மு.க இற்கு எதிராக விழக்கூடிய வாக்குகளில் அதிகளவான வாக்குகள் பிரிபடுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுமென்பதே உண்மை. அதேநேரத்தில் விஜயகாந்தினுடைய கட்சியும் இவ்வாறு கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதால் அவருக்கு ஒரு ஆசனமாவது கிடைக்குமா? என்ற வினாவும் அச்சமயத்தில் காணப்பட்டது. *(தினத்தந்தி, 10.04. 2016)* இறுதியில் அதுவே உண்மையாகவும் போனது.

அவ்வாறே சென்றமுறை மக்களவைத் தேர்தலில் கூட்டணி வைத்த பாரதீய ஜனதாக் கட்சியுடன் சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா கூட்டணியினை இம்முறை அமைக்கவில்ல. இவர்களுக்கு இடையிலே கருத்து வேறுபாடுகள் பெரியளவில் இல்லையாயினும் அக்கட்சியுடன் கூட்டணியினை அமைப்பதனால் தனக்கு விழுகின்ற வாக்குகளின் எண்ணிக்கையானது விழ்ச்சி அடைவதற்கான வாய்ப்புக்கள் குறையுமென அவர் எண்ணியிருந்தார். அப்படி இவர் பாரதீய ஜனதாக் கட்சியுடன் இணைந்திருந்தால் அது தி.மு.க விற்குப் பலமாக அமைவதற்கான சந்தர்ப்பம் அதிகம். காரணம் பொதுவாக பாரதீய ஜனதாக் கட்சியினை ஒரு மதவாதக் கட்சியாகவே அதனது எதிர்கட்சிகள் பார்ப்பது வழக்கம். அப்படியிருக்க அது இஸ்லாமியர்களது வாக்குளைத் தனக்கு எதிராகத் திசை திருப்பி விடுமென அவர் எண்ணியிருக்கலாம். உண்மையில் தி.மு.க காங்கிரசுடன் கூட்டணி வைத்திருக்கின்றபோது அ.இ.அ.தி.மு.க பாரதிய ஜனதாக் கட்சியுடன் வைத்திருக்க வேண்டும். பா.ம.க இப்பெரிய கட்சிகள் இரண்டுடனும் இணையவில்லை. மக்கள் நலக்கூட்டணியினது இணைவானது பா.ம.க க்கும் பிரச்சினையினை உண்டு பண்ணியிருக்க வேண்டும். இதனால் ஓரளவிற்கு மக்கள் மத்தியில் செல்வாக்கினைப் பெற்றுள்ள இத்தகைய சிறிய கட்சிகள் தி.மு.க விலிருந்து விலகி நிற்பது அ.இ.அ.தி.மு.க ஓரளவிற்குச் சாதகமாக அமைந்தது. இதனாலோ என்னவோ ஜெயலலிதா இக்கட்சிகளது தலைவர்களையும் கட்சி உறுப்பினர்களையும் அவற்றினது நடவடிக்கைகளையும் விமர்சிப்பதனை நிறுத்துமாறு தனது தொண்டர்களுக்கு அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.வாசன் தலைமையிலான தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியானது மக்கள் நலக்கூட்டணியுடன் தேர்தல் உடன்பாட்டினைச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தினைப் பொறுத்தவரை தென்மாவட்டங்களது வாக்குகளில் அனேகமானவை அ.இ.அ.தி.மு.க விற்கே எம்.ஜி.ஆருடைய காலத்திலிருந்து சொந்தமாக்கப்பட்டிருந்தன. அத்தகைய வாக்குகளைத் திசை திருப்புவதென்பது கடினம். அதேநேரத்தில் அம்மாவட்டங்களிலுள்ள இஸ்லாமியர்களது, கிறிஸ்தவர்களது வாக்குகளில் அனேகமானவையும், மத்தியதர வர்க்கத்தவரது வாக்குகள் அனேகமானவையும். மாற்றத்தினை விரும்புகின்றவர்களது வாக்குகளும்,அரச உத்தியோகத்தர்களது வாக்குகளில் பெரும்பாலானவையும் தி.மு.கவிற்கே சென்றடைந்தன. வடமாவட்டங்களைப் பொறுத்தவரை அவர்களில் அனேகர் ஒவ்வொரு தேர்தலிலும் மாறி மாறித் தமது வாக்குகளை இரண்டு கட்சிகளுக்கும் அளிப்பார்கள். அவ்வகையில் இம்மாவட்டங்களில் தி.மு.கவிற்கே அதிகமான வாக்குகள் கிடைத்தன. அதுமட்டுமன்றி அண்மையில் சென்னையில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்திற்கு ஜெயலலிதாவே பொறுப்பேற்க வேண்டுமெனவும் அவர் முன்கூட்டியே அதற்கான நடவடிக்கைகள் எவற்றினையும் எடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டு எதிர்கட்சிகளால் முன்வக்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், சென்னை ஆகிய மாவட்டங்களில் உள்ளடங்கிய 59 தொகுதிகளில் ஜெயலலிதாவிற்கான வெற்றி வாய்புக்கள் குறைவடையலாமென எதிர்பார்க்கப்பட்டது.ஆனால் இவை எல்லாவற்றினையும் தாண்டி அமோக வெற்றியினைக் கருத்துக்கணிப்புக்களையும் பொய்யாக்கி வெற்றி பெற்றிரந்தார் ஜெயலலிதா.

**முடிவுரை**

அ.இ.அ.தி.மு.கஎன்ற கட்சியினதும் அதனது கட்டுப்பாட்டிலுமுள்ள தமிழக அரசினதும் சகல விடயங்களும் அவரது கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளது. பிறரது கருத்துக்கள் கேட்கப்படும்.ஆனால் அது எந்தளவிற்கு அவரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதும் வினாவாக உள்ளது. அவர் எடுக்கின்ற தீர்மானமே உறுதியானதாகவும் இறுதியானதாகவும் இருக்கும். ஏறத்தாள இது ஆரம்ப காலங்களில் எம்.ஜி.ஆர் கடைப்பித்த சில இயல்புகளை ஒத்தவகையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அரசாங்க நிதி கையாடல், நிலத்தினை சட்டரீதியற்ற முறையில் கையாடல், உழல் மோசடி, அரச நிர்வாகத்தில் வெளிப்படையின்மை, பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காணுவதற்கு கடித அரசியல். காணொளி அரசியல், 110 விதியின் ஊடான சட்டமன்ற அரசியலில்நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள், தொலை நோக்குத் திட்டமின்மை, குடிநீர், மின்சாரப் பிரச்சினைக்கு சரியான தீர்வின்மை, மத்திய அமைச்சர்களைச் சந்திக்காமை இலவசங்களை வழங்கி மக்களைத் திசை திருப்புதல் போன்ற பல்வேறு வகையான குற்றச்சாட்டுக்கள் இவர்மீது பொதுவாகவும் நீதிமன்றங்களிலும் காணப்பட்டாலும்கூட இவர் மாநில மக்களால் ஆதரிக்கப்பட்டதன் பின்னணியிலேதான் இதுவரை அவரால் 3 தடவைகள் முதலமைச்சராக பதவியில் அமர முடிந்தது. எம்.ஜி.ஆரினது மறு பிறப்பாக அவரைத் தமிழக மக்களில் சிலர் பார்க்கின்றனர். அவரது நலத்திட்டங்களை இவர் தொடர்ந்தவர். ஜெயலலிதாவிற்கு ஆலயம் அமைக்கும் அளவிற்கு அவர்மீது மதிப்பும் மரியாதையினையும் தமிழக மக்கள் வைத்துள்ளனர்.மாநிலத்தினது தொழில்துறையினை வளர்க்கின்ற நோக்கத்துடன் பல தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கியவர். மாநிலத்தினுடைய வறுமை, வன்முறை என்பனவற்றினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்.

இருப்பினும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ள பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களை அகற்ற முற்படுவதுடன் இனிவருங்காலங்களில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இவர்மீது சுமத்தப்படாமல் இயன்றளவிற்கு எச்சரிகையுடன் இவர் செயற்படுவதுஅவசியம். அதுவே அவரது நீடித்த அரசியல் வாழ்விற்கும் கட்சிக்கும் பயன் தருவதாக அமையும்.

**குறிப்புக்கள்**


**நூல்கள்**

1. அறிவகராஜா,க.(2011) தமிழக அரசியலில் ஜெயலலிதா,மதுரை: பல்சமய ஆய்வாளர் மன்றம்.

2. Vaasanthi, K. ( 2012) Jayalalithaa ; A Portyait, New Delhy : Penguin.

**பத்திரிகைகள்**

1. தினத்தந்தி, சென்னை.

1. தினமணி, சென்னை.

3 தினமலர், சென்னை.

2. தினகரன், சென்னை.

3.. வீரகேசரி, கொழும்பு.

4. தினக்குரல், கொழும்பு.

**கருத்தரங்கு**

11.05.2016இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது வரலாற்றுத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழகச்சட்டமன்றத் தேர்தல் 2016 என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலாநிதி க.அருந்தவராஜாவின் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.

**இணையம்**

(https://en.wikipedia.org/wiki/**Jayalalitha**a)

www.bbc.com/news/world-asia-india-32857257